1981 பிப்ரவரி 7]

கல்ராயன் மலைப் பகுதியில் மூங்கில் வளர்ப்பு.

வினா எண் 230—திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்ராயன் மலைப்பகுதியில் மூங்கில் வளர்க்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு பணி துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) மூங்கில் நடும் திட்டம் இந்த ஆண்டு (1980–81) முதல் தொடங்கி நடந்து வரும்.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவர் அவர்களே, கல்ராயன் மலைப் பகுதியிலே முன்பு இயற்கையாகவே மூங்கில் அதிகமாக விளைந்து வந்தது. தற்போது அது அழிந்துவிட்டது. இந்த மலைப் பகுதி இப்போது வன இலாகாவிலே செயல்பட்டு வருகிறது. இந்த மூங்கில் நடும் திட்டம் தொடங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டு எத்தனை ஏக்கர் நடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கல்ராயன் மலைப் பகுதியில் 2,250 ஹெக்டேர் பரப்பளவில் புதிய காடுகள் ஏற்படுத்துவது குறித்து சுமார் 28 லட்சம் ரூபாயிலே இப்போது திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அது 1980–81 லிருந்து துவங்கி நடத்தப்பட்டு வருகிறது. அதிலே மூங்கில் வளர்ப்புத் திட்டமும் ஒரு பகுதியாகும்.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவர் அவர்களே, அங்கே மூங்கில் உற்பத்தி குறைந்து விட்டது என்பது தான் எங்களுடைய கருத்து. இருந்தாலும் அதிகப்படியாக இன்னும் கூடுதலான ஏக்கரில் சாகுபடி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மூங்கில் அங்கே மாத்திரம் குறைந்து விடவில்லை. பொதுவாகவே தமிழகத்திலே மூங்கில் பற்றாக்குறையாகிவிடுமோ என்ற ஐயம் இருக்கிறது. ஆகவே மூங்கில் வளர்க்கும் திட்டங்களில் அரசு அதிக கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. நிதி நிலைமைகளையொட்டி மேலும் இந்தத் திட்டங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சி. பழனிமுத்து : கல்ராயன் மலைப் பகுதியிலே வாழ்கின்ற மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பழைய இடங்களிலே மூங்கிலை அரசு நட உள்ளதா? அல்லது ஏற்கனவே அவர்கள் அனுபவித்து வருகின்ற இடங்களைக் கையகப்படுத்தி மூங்கிலை வளர்க்கப் போவதாகக் கூறுகிறார்களே அதுபோல் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வனத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கக் காடுகள் என்ற பகுதிகளில் இந்த மரங்களை வளர்க்கின்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

எலிகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதம்.

*வினா எண் 231—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாட்டில் விவசாயிகளின் பயிர்களை எலிகள் நாசப்படுத்துவதை அரசு அறியுமா

(ஆ) ஆம் எனில் அதை தடுக்க அரசு மேற்கொண்டுள்ள திட்டம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) எலிகளை ஒழிக்கும் திட்டம் விவசாயத் துறையில் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக எல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றது. எலிகளை ஒழிக்கும் மருந்துகள் போதுமான அளவு வேளாண்மைத் துறையின் கிடங்குகளின் மூலமாக உழவர்களுக்கு கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. விவசாயப் பணியாளர்கள் எலி ஒழிக்கும் முறைகளை விளம்பரப் படுத்துகின்றார்கள்.